**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

E.P.No.05/2024

in

A.R.C.No.141/2018

தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ்,

மன்னார்குடி, அதற்காக அதன் சீட்டு நடத்துபவர்

..... மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்

**//எதிர்//**

1. ரமேஷ்
2. சஞ்சய்காந்தி
3. சேகர்
4. ஸ்டீபன்
5. தண்டபாணி ..... எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்

தலைமை ஆசிரியர்,

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,

செருவாமணி. ..... 2 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

கிளை மேலாளர்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

பட்டுக்கோட்டை. ..... 3 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

தலைமை ஆசிரியர்,

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,

குமாரமங்கலம். ..... 4 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

கிளை மேலாளர்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்,

கண்டோன்மெண்ட், திருச்சி. ..... 5 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அறிவழகன், B.Sc., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலசுந்தரம், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் .....

**உத்தரவு**

இம்மனுவானது 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் செலுத்தவேண்டிய தொகைக்காக அவர்களது மாத சம்பளத்தில் பிடித்தம் செய்யும் பொருட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 11-ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

இந்நிறைவேற்று மனு 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 48-ன்படி நோட்டீஸ் அனுப்பி கேட்டும், மேற்படி அறிவிப்பை 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் பெற்றுக் கொண்டபின் தொகை செலுத்தாவிடில் மேற்படி 2வது எதிர்மனுதாரர் செருவாமணி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, உதவி ஆசிரியராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ.20,088/- சிபிசி பிரிவு 60-ன்படி பிடித்தம் செய்யக்கூடாத தொகை ரூ.1000/- போக மீத தொகை ரூ.19,088/-ல் 3ல் 1 பங்கு தொகையான ரூ.6,363/- 2ம் எதிர்மனுதாரர் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்திட பற்றுகை உத்தரவு பிறப்பித்தும், மேற்படி பற்றுகை உத்தரவு (Pro Order) 2 வது எதிர்மனுதாரர் கார்னிஷியான செருவாமணி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, தலைமை ஆசிரியருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி 3 வது எதிர்மனுதாரர் பட்டுக்கோட்டை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில், உதவியாளராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ.16,147/- சிபிசி பிரிவு 60-ன்படி பிடித்தம் செய்யக்கூடாத தொகை ரூ.1000/- போக மீத தொகை ரூ.15,147/- ல் 3 ல் 1 பங்கு தொகையான ரூ.5,049/- 3 ம் எதிர்மனுதாரர் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து பற்றுகை உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்படி பற்றுகை உத்தரவு (Pro Order) 3 வது எதிர்மனுதாரர் கார்னிஷியான பட்டுக்கோட்டை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கிளை மேலாளர் அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி 4 வது எதிர்மனுதாரர் குமாரமங்கலம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஆசிரியராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ.14,908/- சிபிசி பிரிவு 60 ன்படி பிடித்தம் செய்யக்கூடாத தொகை ரூ.1000/- போக மீத தொகை ரூ.13,908/-ல் 3 ல் 1 பங்கு தொகையான ரூ.4,636/- 4 ம் எதிர்மனுதாரர் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்திட பற்றுகை உத்தரவு பிறப்பித்தும், மேற்படி பற்றுகை உத்தரவு (Pro Order) 4 வது எதிர்மனுதாரர் கார்னிஷியான குமாரமங்கலம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தலைமை ஆசிரியருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி 5 வது எதிர்மனுதாரர் திருச்சி, கண்டோன்மெண்ட், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில், நடத்துனராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ. 17,056/- சிபிசி பிரிவு 60 ன்படி பிடித்தம் செய்யக்கூடாத தொகை ரூ.1000/- போக மீத தொகை ரூ.16,056/-ல் 3 ல் 1 பங்கு தொகையான ரூ.5,352/- 5 ம் எதிர்மனுதாரர் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்திட பற்றுகை உத்தரவு பிறப்பித்தும், மேற்படி பற்றுகை உத்தரவு (Pro Order) 5 வது எதிர்மனுதாரர் கார்னிஷியான திருச்சி, கண்டோன்மெண்ட், தமிழ்நாடு அரசு போக்குவரத்து

கழகம், கிளை மேலாளர் அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் சம்பள ஜப்தி தொகையை வரவு வைத்து வசூல் செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் நிறைவேற்று மனுவானது சட்டப்படி சரியானதல்ல. மனுவை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். நிறைவேற்று மனுதாரருக்கு 3 ம் எதிர்மனுதாரர் நேரடியாக கடனாளியல்ல என்பதால் மனுவானது 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் உள்ளது.

நிறைவேற்று மனுதாரர் நிறுவனத்திடம் கடன் பெற்ற கடன்தாரர் மீது உரிய நடவடிக்கை எடுத்து தொகையினை வசூல் செய்யாமல் கடன்தாரருக்கு பிணையாக கையொப்பம் இட்ட இந்த 3 ம் எதிர்மனுதாரரை கடன்தாரர் பெற்ற கடனுக்கு பொறுப்பாக்குவது சட்டப்படியும் நியாயப்படியும் சரியானதல்ல. 3 ம் எதிர்மனுதாரரின் அறியாமையை பயன்படுத்தி கொண்டு அவருக்கு முழுமையான விபரம் சொல்லாமல் கடன் பிணையில் கையொப்பம் பெற்று கொண்டு வேண்டுமென்றே 3 ம் எதிர்மனுதாரர் அரசு ஊழியர் என்பதால் கடனை வசூல் செய்ய இந்த நிறைவேற்று மனுவில் மனுதாரர் சூழ்ச்சி கரமாக மனுவை தாக்கல் செய்துள்ளார்.

நிறைவேற்று மனுதாரர் கடன் பெற்ற 1ம் எதிர்மனுதாரர் தற்காலம் வசிக்கும் முகவரியை கண்டுபிடித்து அவருக்கு உரிய அறிவிப்பு அனுப்பி அவரிடம் கடனை திரும்ப வசூல் செய்ய நடவடிக்கை எதுவும் நிறைவேற்று மனுதாரர் நாளது தேதி வரை எடுக்காமல் இருந்துவிட்டு பிணையாக கையொப்பமிட்ட 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மீது நேரடியாக

நடவடிக்கை எடுத்து இருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் பிழையானதாகும். 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்காமல் இந்த நிறைவேற்று மனுவை எதிர்மனுதாரர்களின் கார்னிஷிகளுக்கு அறிவிப்பு அனுப்பியதில் இருந்தே நிறைவேற்று மனு நிதி நிறுவனம் சட்ட பிழையாக நடவடிக்கை எடுத்து இருப்பது நீதிமன்றத்திற்கு தெரிய வரும். 1ம் எதிர்மனுதாரர் மீது கடனை வசூல் செய்ய எடுத்த நடவடிக்கைகள் விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கதக்கதல்ல. ஆகவே, 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து நிறைவேற்று மனு நடவடிக்கைகளை 3ம் எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u> :-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும்போது 2ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 28.01.2025 ம் தேதியன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் தினசரி நாளிதழ் மூலம் அறிவிப்பு அனுப்பியும் 4, 5 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு வருகை இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு

தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

**4.** மேற்படி மனு மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலனை செய்ததிலிருந்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி அவர்கள் தொகையினை செலுத்தி வைக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. எனவே, அவர்களது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.** மேலும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து 2ம் எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.6,000/- வீதம் 6 மாதங்களுக்கு ரூ.36,000/-பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.3,594/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்தும், 3 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்களின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.5,000/- வீதம் 7 மாதங்களுக்கு ரூ.35,000/-பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.4,594/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்தும், 4ம் எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.4,500/- வீதம் 8 மாதங்களுக்கு ரூ.36,200/- பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.3,594/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து சம்பள ஜப்தி செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வுக் காண்கிறது.

**6) முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.6,000/- வீதம் 6 மாதங்களுக்கு ரூ.36,000/-பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.3,594/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்தும், 3 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்களின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.5,000/- வீதம் 7 மாதங்களுக்கு ரூ.35,000/-பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.4,594/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்தும், 4ம் எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.4,500/- வீதம் 8 மாதங்களுக்கு ரூ.36,200/- பிடித்தம் செய்தும், மீதத்

தொகை ரூ.3,594/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து சம்பள ஜப்தி செய்து உத்தரவிடப்படுகிறது. For Pro order Batta call on 30.01.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.06 15:32:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.06 15:32:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**E.P.No.05/2024**

**in**

**A.R.C.No.141/2018**

மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி டவுன், 59/பி, நடேசன் தெரு, கனரா வங்கி மாடியில் இயங்கி வரும் தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிட், அதற்காக அதன் சீட்டு நடத்துபவர்.

.... மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்

// எதிர்//

1. திரு.ரமேஷ், வயது 49, த/பெ.ராஜமாணிக்கம், வசிப்பிடம் கதவிலக்கம் 1/65, மேல வேளாளர் தெரு, விக்கிரப்பாண்டியம் - 601 203, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
2. திரு.சஞ்சய்காந்தி, வயது 46, த/பெ.அண்ணாமலை, இந்து, வசிப்பிடம் 3/88, திட்டச்சேரி பிளாக் - 2, திருத்தாங்கூர் - 610 205, திருத்துறைப்பூண்டி டி.மு. தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
3. திரு.சேகர், வயது 54, த/பெ.நாராயணசாமி, இந்து, வசிப்பிடம் கலைஞர் நகர், நீலகிரி - 613 004, தஞ்சாவூர் மாவட்டம்.
4. திரு.ஸ்டீபன், வயது 54, த/பெ.செல்வராஜ், இந்து, வசிப்பிடம் 78/36 ஏ, தெற்கு வீதி, எஸ்.என்.எஸ்.தியேட்டர் அருகில், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
5. திரு.தண்டபாணி, வயது 45, த/பெ.தங்கவேல், இந்து, வசிப்பிடம் 3/39, ஆர்.எம்.எஸ்.காலனி, கருமண்டபம், திருச்சி - 620 001.

.... எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்

தலைமை ஆசிரியர் அவர்கள், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, செருவாமணி.

..... 2 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

கிளை மேலாளர் அவர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், பட்டுக்கோட்டை.

..... 3 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

தலைமை ஆசிரியர் அவர்கள், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, குமாரமங்கலம்.

..... 4 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

கிளை மேலாளர் அவர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கண்டோன்மெண்ட், திருச்சி.

..... 5 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

இம்மனுவானது 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் செலுத்தவேண்டிய தொகைக்காக அவர்களது மாத சம்பளத்தில் பிடித்தம் செய்யும் பொருட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 11-ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 22.08.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 22.08.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அறிவழகன், B.Sc., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலசுந்தரம், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் .....

**தீர்ப்பாணை உத்தரவு**

01. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. For Pro order Batta call on 30.01.2026.

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.06 15:33:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.